
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1199

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

159

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மும்பை த.மு.பொற்கோ அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# மும்பை த.மு.பொற்கோ ; திராவிட இலட்சியச் சுடர்



“திராவிட இயக்கக் கொள்கைகளில் புடம் போட்ட தங்கமாகத் திகழ்ந்தவர். மும்பை பெருநகரில், கழகம் வளர்த்த இலட்சியச் சுடர் த.மு.பொற்கோ” என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு. மும்பை மாநகரில், கழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட கழக முன்னோடி. கழகத்தின் தொடக்க காலகட்டத்திலேயே, மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கெல்லாம் தானாகச் சென்று கொள்கை வகுப்பு நடத்தி, உற்சாகத்தோடு அவர் உழைத்ததின் விளைவுதான் மும்பையில் இன்று தமிழர்கள் இல்லங்களில் பொங்கும் கழக உணர்வு. மும்பைத் தமிழர்களின் நண்பராக, குடும்ப உறுப்பினராக, மரியாதைக்குரிய பெரியவராக மதிக்கப்பட்ட முன்னோடி. மகாராஷ்டிரா மாநிலத்தில் கழகத்தின் பெருந்தூண்.

பொற்கோ அவர்களின் பூர்வீகம், திருநெல்வேலி மாவட்டம், அழகநேரி அருகே உள்ள பிரான்குளம். பெற்றோர் சித.சிதம்பரம் - வடிவேல் அம்மாள். வளரும் பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். அதனால், இவரது கவனத்தைத் திசை திருப்பும் வகையில், பணி நிமித்தமாக மும்பைக்குச் செல்லலாம் என வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றுள்ளார் இவரின் சகோதரர். அப்படி 1950-ஆம் ஆண்டில் மும்பைக்கு இடம் பெயர்ந்தவர்.

பொற்கோவின் திராவிட இயக்க ஈடுபாட்டை, திசை திருப்புவதற்காக குடும்பத்தினர் அந்த ஏற்பாட்டைச் செய்தனர். ஆனால், வேறு மாநிலத்தில், வேறு மொழி பேசுவோருடன் உறவாடினாலும், பகுத்தறிவு, சமூகநீதிக் கொள்கைகள் அவற்றையெல்லாம் கடந்தது என்பதை, அவர்கள் குடும்பத்தினர் உணரவில்லை. அவர், பெரியாரின் தொண்டராக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக திராவிட இயக்க உணர்வுடன் மும்பையில் தி.மு. கழகத்தின் கிளைகளைக் கட்டத் தொடங்கினார். தொடக்கத்தில், ‘நெடுஞ்செழியன் அறிவியக்க மன்றம்’ என்கிற அமைப்பினைத் தொடங்கி, இளைஞர்களுக்குக் கொள்கை வகுப்புகளை நடத்தத் தொடங்கினார்.

### கழகக் கிளைகள் தொடக்கம்

1952-ஆம் ஆண்டிலேயே, மும்பைக்கு பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், என்.வி.நடராசன், அரங்கண்ணல் ஆகிய முன்னோடிகளை அழைத்து வந்து, மும்பையில் பல இடங்களில் பொதுக்கூட்டங்களை நடத்தினார். மும்பை, பாண்டுப், பொய்சர், கொலபா, தாராவி எனப் பல பகுதிகளில் கூட்டங்கள் நடத்தி, கிளைக் கழகங்களைத் தொடங்கினார். தமிழ்நாட்டில் கழகத்தின் பொதுக்கூட்டங்கள், மாநாடுகளுக்கு மும்பையில் இருந்து கழகத்தினருடன் திரளாகக் கலந்துகொள்ளும் வழக்கம் கொண்டிருந்தார் பொற்கோ.

கழகத்தின் பணிகளுடன், ‘தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு’ ‘தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு’ ஆகிய அமைப்புகளையும் மும்பையில் தொடங்கி, அவற்றின் தலைவராக இருந்து, அனைத்துத் தரப்பு தமிழ் மக்களையும் திரட்டுவதில் வெற்றி பெற்றவர். மும்பை தமிழர்களுக்கு பாதிப்பு என்றால், அனைத்து அமைப்புகளையும் உடனடியாகக் கூட்டி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்.

1965-ஆம் ஆண்டில், மும்பையில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அதற்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி தமிழர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்தியவர்களில் ஒருவர். அந்தத் துயர நிகழ்வுக்குக் காரணமாக இருந்த பால் தாக்கரே உள்ளிட்ட தலைவர்களுடன் பேசி, சுமூக நிலையை எட்ட வைத்ததில் முக்கிய பங்காற்றியவர். பின்னாட்களில், 2002-ஆம் ஆண்டில் பொற்கோ அவர்களின் சமூகப் பணிகளைப் பாராட்டி, பால்தாக்கரே ‘சமுதாயச் செம்மல் (புருஷ்கார்)’ என்கிற பட்டத்தினை வழங்கி, பாராட்டி பெருமைப் படுத்தியுள்ளார்.

மும்பையில் அரசியல் பணிகளில் ஈடுபட்டாலும், தமிழ்நாட்டில் கழக நிர்வாகிகளுடன் நல்ல தோழமையும் நட்புணர்வும் கொண்டிருந்தவர். 1967-ஆம் ஆண்டு தேர்தலின்போது, கழகப் பிரச்சார பணிகளுக்காக தமிழ்நாட்டில் தங்கி பணியாற்றி உள்ளார்.

1972-ஆம் ஆண்டில், மும்பை மராத்வாடா சட்டப் பல்கலைக்கழகத்துக்கு, அண்ணல் அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் எனக் கழகத்தின் சார்பில், சென்னையில் அறப்போராட்டத்தினை அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தப் பல்கலைக்கழகத்தின் வாசலில், கழகத்தின் சார்பில், நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை ஒருங்கிணைத்த முன்னோடி பொற்கோ. அதற்காக, மகாராஷ்டிரா அரசுக்கு தந்தி அனுப்பும் போராட்டத்தை, கலைஞர் தொடங்கி வைத்து, வெற்றிகரமாகப் பெயர்சூட்டவும் வைத்தார். மும்பை தமிழர்கள் மத்தியில் கழகத்தின் அந்தப் போராட்டம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மும்பை நிர்வாகிகள் இரத்தினசாமி, புத்தரசு, தியாகராசன், ஆரிய சங்கரன், தேவதாசன், நெல்லை செழியன் எனப் பல முன்னோடிகளுடன் இணைந்து, மும்பையில் செயல்பட்டு வந்த பொற்கோ, 1980-ஆம் ஆண்டுகளில் மும்பை கழகத்தின் அடையாளமாக அறியப்படலானார். அவருடைய ஆழ்ந்த தமிழ் அறிவும், இலக்கியப் புலமையும் எண்ணற்ற எழுத்தாளர்களை, சொற்பொழிவாளர்களை மும்பையில் உருவாக்கியுள்ளது. குறிப்பாக, அரசியல் பகுத்தறிவாளர்களாக ஏராளமான இளைஞர்களை உருவாக்கியுள்ளார்.

### கலைஞர் விருதாளர்

1996-ஆம் ஆண்டில், அவர் மும்பை மாநிலக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்தபோது, கழகத்தின் தேர்தல் நிதியாக 2 இலட்சம் ரூபாயைத் திரட்டி வந்து கலைஞரிடம் வழங்கினார். 2000-ஆம் ஆண்டுவாக்கில் மும்பை கழகம் மாவட்டக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டபோது, மும்பை நகரச் செயலாளராகப் பொறுப்பேற்று வழிநடத்தினார். வயதுமூப்பு காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில், கழகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட முடியாமல் இருந்தாலும், கழக நிகழ்ச்சிகளில், தமிழ் அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்துகொண்டவர்.

2006-ஆம் ஆண்டில் அவரது 74-வது வயதில், பொற்கோ அவர்களின் கழகப் பணியினைப் போற்றி, கழகத்தின் முப்பெரும் விருதுகளில் கலைஞர் விருது அளித்து பெருமை செய்தார் முத்தமிழறிஞர் கலைஞர். நிகழ்ச்சியில் பொற்கோ அவர்களின் உழைப்பினை, கலைஞர் பாராட்டியபோது, “தலைவர் கலைஞர் அவர்களின் உழைப்பினைப் பார்க்கிறபோது, என் உழைப்பு மிகச் சாதாரணம்” என உள்ளம் சிலிர்த்தவர் பொற்கோ. 2014-ஆம் ஆண்டில் அவர் மறையும் நாள் வரை மும்பை கழக அலுவலகத்துக்கு தினமும் வந்து செல்லும் பழக்கத்தை விடவேயில்லை.

கழகம்தான் அவரின் நாடித்துடிப்பாக இருந்தது. சமூகநீதி சுயமரியாதைச் சிந்தனையே அவரை இயக்கியது. தமிழ், தமிழர் இனம் சார்ந்த அரசியல், சமூக, இலக்கிய நிகழ்வுகள், போராட்டங்கள் என மும்பையில் தமிழர்களிடம் அவர் விதைத்த திராவிடச் சிந்தனை, என்றென்றும் நிலைத்திருக்கும்.

“தமிழ், தமிழர் இனம் சார்ந்த அரசியல், சமூக, இலக்கிய நிகழ்வுகள், போராட்டங்கள் என மும்பையில் தமிழர்களிடம் அவர் விதைத்த திராவிடச் சிந்தனை, என்றென்றும் நிலைத்திருக்கும்.”

...துடிக்கும்

## தமிழ்நாடு அரசியலில், ஏற்பட்ட பேரிடர்!

‘ரீல்ஸ் ஆட்சி நடத்தாதீர்கள்’ என முதலமைச்சர் விஜய்க்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்திய நிலையில், அவருடைய வாதத்திற்கு வலுசேர்க்கும் பதிவொன்றை எழுதியுள்ளார் பத்திரிகையாளர் சுகிதா சாரங்கராஜ்.

அவருடைய பதிவில், “முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் போது தமிழ்நாட்டிற்கு பத்து லட்சம் கோடி ரூபாய் கடன் இருப்பதாக, விஜய் சொன்னதையடுத்து அவரது ரசிகர்கள் தமிழ்நாட்டின் திடீர் நிதி சுமைதாங்கிகளாக மாறி இருக்கிறார்கள். குழந்தைகள் அம்மா, அப்பாவை முதலமைச்சர் நிவாரண நிதிக்குப் பணம் அனுப்பச் சொல்லி அடம்பிடித்து ரீல்ஸ் போடுகிறார்கள். அவர்களுக்கு, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கூடவே, தாங்களும் சேமிப்பை அனுப்புவதாக அந்த ரீல்ஸ்ஸில் சொல்கிறார்கள். சிலர் பணம் அனுப்பியுள்ளதாக DD புகைப்படங்கள் வேறு. (கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்கள்).

குழந்தைகள் இப்படி என்றால், பெண்கள், ‘விஜய் அண்ணா சிலிண்டர், உரிமைத்தொகை எல்லாம் வேண்டாம்’ என்று ரீல்ஸ் போடுகிறார்கள். முதலமைச்சர் நிவாரண நிதிக்குப் பேரிடர் காலங்களில்தான் பொதுமக்கள் நிதி அனுப்புவார்கள். இப்போது அப்படியான அசாதரண சூழல் எதுவும் இல்லை. உலகப் பொருளாதாரம், அசாதாரண சூழலை முன்வைத்து பிரதமரின் சிக்கன அறிவிப்புகளுக்கு, தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு, செயல்திட்டம் என்ன என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. தேர்தலுக்குப் பின் மக்கள் ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை அளிக்காமல் தமிழ்நாடு அரசியலில்தான் பேரிடர் ஏற்பட்டுள்ளது. ஆனாலும், நிலையான ஆட்சி அமைவதற்கான எண்களை த.வெ.க. சட்டமன்றத்தில் நிரூபித்துவிட்டது. ஆகையால், ஆட்சி நிர்வாகத்தைத் திறம்பட நடத்த எந்தத் தடையும் இல்லை. பிறகெதற்கு குழந்தைகள், பெற்றோர்களிடம் தமிழக அரசின் கடனை அடைக்க காசு கேட்டு, ரீல்ஸ்களில் தொந்தரவு செய்கிறார்கள்.

மறைமுகமாக குழந்தைகளைத் தூண்டிவிட்டு, முதலமைச்சர் நிவாரண நிதிக்குப் பணம் அனுப்ப, இத்தகைய ரீல்ஸ்கள் கடந்த கால toolkit களை போல இருந்தால்... இது பேரிடரைவிட பேராபத்து. தமிழ்நாடு அரசு உடனடியாக, இத்தகைய ரீல்ஸ் போடுபவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ப்ளாஷ்பேக்



கவிஞர் அமிர்தம் சூர்யா



### ‘கடவுளைக் கண்டுபிடிச்சிட்டாரா?’

2013-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் 90-வது பிறந்தநாள் விழா, ஜூன் மாதத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வில், ‘கலைஞர் 90’ என 90 கவிஞர்கள், எழுத்தாளர்கள் என்று பெரும்பட்டாளமே கலைஞரைக் கொண்டாடியது. கலைஞரைச் சந்திக்க என் பெயர் அழைக்கப்பட்டதும், நான் கலைஞருக்குப் பூங்கொத்தைக் கொடுத்தேன். கவிப்பேரரசு வைரமுத்து, என் சிறுகதைத் தொகுப்பை கலைஞரிடம் கொடுத்து, “இவர் கவிஞர் அமிர்தம் சூர்யா, பத்திரிகையாளரும் கூட” என்று அறிமுகம் செய்தார். அந்தப் புத்தகத்தின் தலைப்பு ‘கடவுளைக் கண்டுபிடிப்பவன்’. அதை வாசித்த கலைஞர், சிறு நகைப்புடன் ‘கடவுளை கண்டுபிடிச்சுட்டாரா?’ என்றார், கரகரப்பான குரலில். ‘ஒரு தேடல்தான் ஐயா’ என்றேன்.

– கவிஞர் அமிர்தம் சூர்யா,
பத்திரிகையாளர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கருத்துரிமையை நசுக்கிய காங்கிரஸ்!

1938-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டச் செய்திகளை வெளியிட்ட இதழ்கள் மீது, அன்றைய காங்கிரஸ் அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. விடுதலை இதழ் வெளியீட்டாளர் ஈ.வெ.கிருஷ்ணசாமி, ஆசிரியர் முத்துச்சாமி ஆகியோர் அக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டு 6 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். விடுதலை, குடிஅரசு, பகுத்தறிவு இதழ்கள் வைப்புக் கட்டணமாக ரூ.1,000 செலுத்த வேண்டுமென்று 1939 ஜனவரி 4-ஆம் நாள் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900